Ex-Teachers of Sundarambal School, Keelathurai.

* 37 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the services of ex-teachers of Sundarambal School, Keelathurai, Madurai, absorbed in various Panchayat Union Schools have not yet been regularised, nor have they been sanctioned due increments or awarded Selection Grade ; and

(b) if so, the reasons therefor ?

கீழத்துறை, சுந்தராம்பாள் பள்ளியின் முன்னாள் ஆசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பல்வேறு ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணியில் அமர்த்தப் பட்டுள்ள மதுரை, கீழத்துறை, சுந்தராம்பாள் பள்ளியின் முன்னாள் ஆசிரியர் களின் பணிகள் இதுவரையில் முறைப்படுத்தப்படவில்லை என்பதோ, அவர் களுக்குச் சேர வேண்டிய ஊதிய உயர்வுகள் வழங்கப்படவில்லை என்பதோ அல்லது தேர்வு நிலை வழங்கப்படவில்லை என்பதோ உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(இ) இந்தப் பள்ளியின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டதை அடுத்து நீதி மன்றங்களில் பள்ளி நிர்வாகியால் தொடரப்பட்ட வழக்குகள் முடியும் வரை ஊராட்சி ஒன்றியங்களில் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆசிரியர்களின் பணியை முறைப்படுத்தி ஊதியத்தை நிர்ணயித்தல் போன்றவற்றைச் செய்ய இயலவில்லை.

திரு. பி. ஆர். தாமஸ் : அநேக ஆண்டுக் காலமாக அடிப்படை ஊதியத் தைத் தான் அந்த ஆசிரியப் பெருமக்கள் வாங்கி வருகிறார்கள். 1005 எண்ணுள்ள அரசு ஆணையின்படி 10 ஆண்டுக் கால பணி முடிந்திருந்தால், தேர்வு நிலை வழங்கலாம். 30 பேர் அடிப்படை ஊதியத்தைத்தான் அநேக ஆண்டுகளாக வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். 15 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்குத் தேர்வு நிலை வழங்க அரசு உத்தர விடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : எவ்வளவு சிக்கிரமாக முடியுமோ அவ்வளவு சிக்கிரம் கொடுக்கத்தான் அரசு விரும்புகிறது. ஆனால் மதுரை, நகர மாவட்ட நீதிமன்றத்தில் நிர்வாகம் தொடர்ந்துள்ள வழக்கு இன்னும்

1978 செப்டம்பர் 7]

முடியவில்லை. வழக்கு முடிவடைந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று அரசு வழக்கறிஞர் கூட கருத்து தெரிவித்திருக்கிறார். வழக்கு முடிவடைந்ததும் அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஊராட்சி மன்றங்களில் இருக்கின்ற பள்ளிக்கூடங்களில் ஆணையர்கள் அரசின் ஆணையினை விதம் விதமாக தங்களுடைய மனம் போன போக்கில் 'இன்டர்பிரட்' செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆசிரியர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான பலன்களுக்குக் குறுக்கே நிற்கிறார்கள். குட்டி ஜமீன்தார்களைப் போல் அனைத்துக் காரியங்களையும் செய்கிறார்கள். இதுமாதிரியான தவறுகள் பரவலாக ஆங்காங்கே இருப்பதால், குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. ஆணையர்கள் இதுமாதிரி செய்யாமல் இருக்க தகுந்த ஆணையினை அரசு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தவறான முறையிலே ஆணையர்கள் அரசு ஆணையை மதிக்காமல் இருப்பதாக அரசுக்குத் தெரியப்படுத்தினால், அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

திரு. பி. ஆர். தாமஸ் : 30 ஆசிரியர்கள் பெரும் கிளர்ச்சி செய்த பிறகு தான், பணியில் அமர்த்தப்பட்டார்கள். 4 ஆண்டுகள் ஆன பிறகும், மேல் முறையீட்டுக்குப் பிறகும்கூட பணி முறைப்படுத்தப்படவில்லை என்பதற்கும், ஊதிய உயர்வுகள் வழங்கப்படவில்லை என்பதற்கும் அல்லது தேர்வுநிலை வழங்கப்படவில்லை என்பதற்கும் இதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. எனவே இது குறித்து விரைவில் ஆணை வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அந்த ஆசிரியர்கள்பால் அரசுக்கு அனுதாபம் இருக்கிறது. அவர்களுடைய போராட்ட வரலாற்றை நானும் கூட இருந்து அறிந்தவன். உரிய முறையில் நியாயம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்கும். உறுப்பினர் திரு. தாமஸ் சொல்வதற்கும் அரசு வழக்கறிஞர் சொல்வதற்கும் வேறுபாடு இருக்கிறது. அரசு இதுபற்றி நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம் : சுந்தராம்பாள் பள்ளியின் நிர்வாகி ஆசிரியர்களை அந்தப் பள்ளியிலிருந்து ஊராட்சிப் பள்ளிக்கு மாற்றியதற்கு வழக்குப் போடவில்லை. ஆசிரியர்களுடைய அந்தப் பள்ளி சம்பந்தமான மற்ற நடவடிக்கைகள் குறித்து வழக்குப் போட்டிருக்கிறார்கள். நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது. ஆசிரியர்கள் வெளியேற்றப்பட்டார்கள் என்று சொன்னதன் காரணமாக, அரசு அவர்கள் ஊராட்சி மன்றப் பள்ளிகளில்

வேலை பார்க்க அனுமதித்தது. வேலைக்குச் சேர்ந்த நாளிலிருந்து 10 ஆண்டுகள் ஆன உடன் செலக்ஷன் கிரேட் கொடுப்பதில் தவறு இல்லை. 10 ஆண்டுப் பணி முடிந்தவுடன் செலக்ஷன் கிரேட் கொடுக்க வேண்டுமென்று கல்வித் துறை ஆணை இருந்தும் கூட, திருநெல்வேலி நகராட்சிப் பள்ளிகளில் நகர மன்ற ஆணையர், கல்வித் துறையில் ஈடுபட்டிருக்கக்கூடியவர் ஆணை உள்ளாட்சித் துறையிலிருந்து வரவில்லை என்று சொல்லி கல்வித் துறை ஆணையைப் புறக்கணித்துள்ளார். கல்வித் துறையிலேயிருந்து எந்த ஆணையைப் பிறப்பித்தாலும், அது உள்ளாட்சித் துறைக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட எல்லாத் துறைக்கும் நகர மன்ற ஆணையர் உட்பட அனைவருக்கும் பொருந்தும் என்ற வகையில் ஒரு பொதுவான ஆணையினை அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-30)

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அந்த வகையில்தான் ஆணையாளர்களுக்கு அரசு அறிவுரை தந்திருக்கிறது. கல்வித் துறைக்கான ஆணைகளை அந்தத் துறைக்குப் பயன்படுத்த வேண்டும். தனியாக விதிமுறைகளை வைத்துக் கொள்ளக் கூடாது என்ற வகையில் உள்ளாட்சித் துறையிலிருந்து தகவல் தரப்பட்டிருக்கிறது.

திரு. எம். சங்கரலிங்கம் : அதற்கு மாறாக நடக்கிற ஆணையாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பெயர் என் அறையில் இருக்கிறது. வேண்டுமானால் குறித்துத் தருகிறேன். குறிப்பிட்ட ஆசிரியருக்குக் கல்வித் துறை ஆணை பொருந்தாது, அதை நாங்கள் ஏற்றுக் கொள்வதில்லை என்று அதில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை எழுதி வேண்டுமானாலும் தருகிறேன். அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நடவடிக்கை எடுக்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தனியார் பள்ளியிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆசிரியர்களை ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் சேர்க்க நடவடிக்கை எடுத்திருப்பது பற்றி அரசுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். என்றாலும் தனியார் பள்ளிகளிலிருந்து தொடர்ந்து வெளியேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி வெளியேற்றப்படுகிறவர்களைக் கால தாமதம் செய்யாமல் அந்தந்தப் பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் வேலையில் அவ்வப்போது அமர்த்த நிரந்தர ஆணை பிறப்பிக்கப்படுமா?

1978 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இது உள்ளாட்சித் துறையைப் பொறுத்தது மட்டுமல்ல. கல்வித் துறையையும் பொறுத்தது. இரு துறைகளும் சேர்ந்து முடிவு செய்து எந்த வகையில் ஆசிரியப் பெருமக்களுக்கு உதவ முடியுமோ அந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : கல்வித் துறைக்குப் பிறப்பிக்கப்பட்டிருக்கும் ஆணை உள்ளாட்சித் துறைக்கும் பொருந்தும் என்று முன்பு கேள்விக்குப் பதில் சொல்லும்போது, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதில் கல்வி அமைச்சர் அவர்களும் பக்கத்தில் இருக்கிறார்கள். இருவரும் கலந்து உறுதியான ஆணை பிறப்பிக்கப்படுமா? ஆசிரியர்களுக்கு நல்ல செய்தி அறிவிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து இந்த அரசினுடைய கவனத்தில் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Teachers promoted as Headmasters.

* 38 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that teachers promoted as Headmasters with fifty years of age or twenty five years of service, need not pass Account Tests for confirmation and for eligibility to draw increments in High Schools under municipal administration; and

(*d*) if so, the reasons for not sanctioning increments to such Headmasters in certain Municipal High Schools in the State, for not having passed the Account Tests?

தலைமையாசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்ற ஆசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஐம்பது ஆண்டுகள் வயதடைந்து அல்லது இருபத்தைந்து ஆண்டுகள் பணிபுரிந்து தலைமை ஆசிரியர்களாக பதவி உயர்வு பெற்ற ஆசிரியர்கள், நகராட்சி நிர்வாகத்தின் கீழ் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில், பணி உறுதியாக்கம், ஊதிய உயர்வு பெறுவதற்கான தகுதி ஆகியவற்றிற்காக, கணக்குத் தேர்வில் தேறியிருக்க வேண்டியதில்லை என்பது உண்மையா?